## April 28, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா - நியூ ஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் திங்கள்கிழமை கையொப்பமானது.

(i) தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், நியூ ஸிலாந்து வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சர் டாட் மெக்லே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதியில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) ஒப்பந்தத்தின் அம்சங்கள்:

- இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவின் 100 சதவீத ஏற்றுமதிகளுக்கு வரி முழுமையாக ரத்து அல்லது வரி குறைப்பு நடவடிக்கையை நியூஸிலாந்து மேற்கொள்ளும். அதாவது, இந்தியாவின் ஏற்று மதிகளுக்கு நியூஸிலாந்தில் வரி விதிக்கப்படாது. இதன் மூலம் குறு-சிறு-நடுத்தர நிறுவனங்கள் மிகுந்த பலனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, ஜவுளி, ஆயத்த ஆடை, தோல், காலணி, நவரத்தின கற்கள், ஆபரணங்கள், பொறியியல் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் உள்ளிட்ட தொழிலாளர் செறிவுமிக்க துறைகள் பலனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- முன்னர், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் செரா மிக்ஸ், மிதியடிகள், வாகனங் கள், வாகன உதிரி பாகங்களுக்கு நியூஸிலாந்து 10 சதவீத வரியை விதித்தது. தற்போது, இதுவும் ரத்து செய்யப்பட உள்ளது.
- கம்பளி, நிலக்கரி, மரக் கட்டைகள், ஒயின், அவகேடோ, புளூ பெர்ரி உள்ளிட்ட நியூஸிலாந்திலிருந்து இந்தியாவுக்கு செய்யப்படும் 95 சதவீத ஏற்றுமதிகளுக்கு வரி முழுமையாக ரத்து அல்லது வரிக் குறைப்பு நடவடிக்கையை இந்த ஒப்பந்தத்தின் படி இந்தியா மேற்கொள்ள உள்ளது. அதே நேரம், பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, நறுமணப் பொருள்கள், சமையல் எண்ணெய், ரப்பர் உள்ளிட்ட பொருள்கள் முதல் வேளாண் பொருள்கள் வரை எந்தவித வரிச் சலுகையையும் இந்தியா அளிக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) வர்த்தக இரட்டிப்பு:

- அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த் தகத்தை ரூ.47,000 கோடி (5 பில்லியன் டாலர்) மதிப்புக்கு இரட்டிப்பாக்குவதையும் இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்காசிய போரால் பாதிக் கப்பட்டுள்ள இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, மாற்று வாய்ப்புகளை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iv) முதலீடு அதிகரிக்கும்:

- இந்த ஒப்பந்தம் மூலம் நியூஸிலாந்து சந்தைகளை இந்திய நிறுவனங்கள் வரியில்லாமல் அணுக முடியும். அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவின் உற்பத்தி, உள்கட்டமைப்பு, சேவைகள், புதிய கண்டுபிடிப்புகள், வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்ட துறைகளில் சுமார் ரூ.1.9 லட்சம் கோடி (20 பில்லியன் டாலர்) முதலீடு செய்ய நியூசிலாந்து உறுதியளித்துள்ளது.
- இரு நாடுகளிடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நிறைவுற்றதாக கடந்த ஆண்டு டிசம்பர் 22-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், 4 மாதங்களுக்குப் பிறகு ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(v) அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் அடுத்த சில மாதங்களில் வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும்' என்று மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

- நியூஸிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்குப் பிறகு தில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், 'இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துடன், கடந்த மூன்றரை ஆண்டுகளில் 7 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்துடனும் வர்த்தக ஒப்பந்தங்கள் கையொப்பமாக உள்ளன' என்றார்.

2. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆண்களைவிட பெண்களே அதிக அளவில் வாக்களித்துள்ளனர்.

(i) 2.52 கோடிக்கும் (86.2 சதவீதம்) அதிகமான பெண்களும், 2.35 கோடிக்கும் (83.96 சதவீதம்) அதிகமான ஆண்களும் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன. வாக்களித்தவர்களில் மூன்றாம் பாலினத்தவர் எண்ணிக்கை 4,417 (58.44 சதவீதம்).

(ii) தேர்தலில் மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

(iii) மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு (எஸ். ஐ.ஆர்.) பிறகு வாக்காளர்களின் எண்ணிக்கை 5.73 கோடியானது. இதில் 2.93 கோடி பெண் வாக்காளர்களும், 2.83 கோடி ஆண் வாக்காளர்களும் அடங்குவர். முதல் முறை வாக்காளர்கள் 14.59 லட்சம். 16 சட்டப்பேரவைத் தொகுதிகள் அடங்கிய சென்னை மாவட்டத்தில் 83.71 சதவீத வாக்குகள் (24.22 லட்சம்) பதிவாகின. இதில் தவெக தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் தொகுதியில் அதிகபட்சமாக 2.03 லட்சம் (89.73 சதவீதம்) வாக்குகளும் முதல்வர் மு.க.ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் 1.82 லட்சம் (86.11 சதவீத) வாக்குகளும் பதிவாகின.

3. அமெரிக்காவின் 250-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, அந்நாட்டுக்குப் பிரிட்டன் அரசர் மூன்றாம் சார்லஸ் மற்றும் அரசி கமீலா 4 நாள் அரசுமுறைப் பயணத்தைத்திங்கள்கிழமை தொடங்கினர்.

(i) நாடாளுமன்றத்தின் அமெரிக்க கூட்டுக் கூட்டத்தில் அரசர் சார்லஸ் உரையாற்றுகிறார்.

(ii) ஈரான் போரில் பிரிட்டன் முறையான ஒத்துழைப்பு அளிக்கவில்லை என டிரம்ப் அதிருப்தியில் உள்ள சூழலில், இருநாட்டு உறவைச் சீரமைக்கும் பாலமாக அரசர் சார்லஸின் இப்பயணம் பார்க்கப்படுகிறது.

4. மத்திய ஆப்பிரிக்க நாடான சாடின் கிழக்குப் பகுதியில், தண்ணீர் பங்கீட்டில் வெடித்த மோதல் பெரும் வன்முறையாக மாறியதில், இது வரை 42 பேர் உயிரிழந்துள்ளனர்; 10 பேர் காயமடைந்தனர்.

(i) சூடான் எல்லையையொட்டிய இகோட் கிராமத்தில் தண்ணீர் பங்கீடு தொடர்பாக இரு குடும்பத்தினருக்கு இடையே கடந்த சனிக்கிழமை தொடங்கிய சிறுதகராறு, பின்னர் இருதரப்பினருக்கும் இடையிலான பழிவாங்கும் தாக்குதலாக உருவெடுத்துப் பரவியது. வன்முறை கட்டுக்கடங்காமல் சென்றதைத் தொடர்ந்து, அப்பகுதியில் ராணுவம் குவிக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

(ii) சாட் நாட்டில் விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இடையே வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் அவ்வப்போது மோதல்கள் ஏற்படுவது வழக்கமாகியுள்ளது.

5. ராணுவ ஆட்சியின் கீழுள்ள மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் பயங்கரவாதத் தாக்குதலில், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாடியோ கமாரா கொல்லப்பட்டார்.

(i) மாலியில் பல ஆண்டுகளாகத் தனி நாடு கோரிப் போராடிவரும் தௌரேக் கிளர்ச்சியாளர்களும், அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ். ஆதரவு பயங்கரவாதிகளும் முதல் முறையாக ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தி, நாடு முழுவதும் பல்வேறு ராணுவ முகாம்களைக் கடந்த சில நாள்களாக கைப்பற்றி வருகின்றனர்.

6. கிரிமினல் வழக்குகளில் கைதாகும் மாநில முதல்வர்கள், பிரதமர்களை பதவிநீக்க வழிவகை செய்யும் மசோதா குறித்து அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜேபிசி) பெற்று வருகிறது.

(i) இதுதொடர்பாக கடந்த 2025-ஆம் ஆண்டில் இந்திய அரசமைப்பு சட்ட (130-ஆவது திருத்த) மசோதா கொண்டுவரப்பட்டது. அந்த மசோதாவில், 5 ஆண்டுகள் அல்லது அதற்கு அதிக ஆண்டுகள் சிறை தண்டனை கிடைக்கும் கிரிமினல் வழக்குகளில், பிரதமர்கள், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாள்களுக்கும் மேல் சிறையில் இருந்தால் தாமாக பதவிநீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தமசோதாவை, அபராஜிதா சாரங்கி தலைமையிலான 31 எம்.பி.க்களை கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வு செய்து வருகிறது. ஆளும் கட்சி கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகள் கூட்டணி உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் அக்குழு பெற்று வருகிறது. மும்பையில் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளுடன் அக்குழு ஆலோசனை நடத்தியது. அதன்பிறகு செய்தியாளர்களிடம் நாடாளுமன்ற கூட்டுக்குழுத் தலைவர் அபராஜிதா சாரங்கி கூறியதாவது:

- மசோதா குறித்து 3 முக்கிய யோசனைகளை ஃபட்னவீஸ் தெரிவித்துள்ளார். அதுகுறித்து ஆராயப்படும். இதுபோல அனைத்து எதிர்க்கட்சிகளுடனும், ஆளும் கட்சியுடனும் குழு ஆலோசனை நடத்தும். பிறகு குழு தனது அறிக்கையை தயார் செய்து, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் தாக்கல் செய்யும்.
- அரசியல் குற்றமயமாவதை தடுக்க இந்த மசோதா உதவும். மேலும், இந்தியாவில் ஜனநாயகத்தை சுத்தப்படுத்தவும், வலுப்படுத்தவும், மிகவும் பொறுப்புடையதாக்கவும் உதவும். இதேபோல், ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, யூனியன் பிரதேச அரசு (திருத்த) மசோதா ஆகியவை குறித்தும் நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வு செய்து வருகிறது என்றார்.

7. சிக்கிமில் பிரதமர் நரேந்திர மோடி திறந்த வாகனத்தில் பிரம்மாண்ட சாலைப் பேரணி சென்றார்.

(i) சிக்கிம் மாநிலம் உருவாக்கப்பட்ட 50-ஆவது ஆண்டு கொண்டாட்ட விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி, காங்டாக்கில் செவ்வாய்க்கிழமை (ஏப்.28) நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி, சிக்கிம் மாநிலம் காங்டாக்கிற்கு வந்தார்.

(ii) அப்போது அவரை சிக்கிம் மாநில ஆளுநர் ஓம் பிரகாஷ் மாத்துர், முதல்வர் பிரேம்சிங் தமாங் ஆகியோர் நேரில் வரவேற்றனர். அப்போது மோடி, சிக்கிம் மக்கள் அணியும் பாரம்பரிய தொப்பி, கோட் அணிந்திருந்தார்.

8. சமீபத்திய தேசியத் தரவுகளின் அடிப்படையில் இந்தியாவின் சுகாதார நிலப்பரப்பின்

பகுப்பாய்வு.

(i) பொதுவான சுகாதாரப் போக்குகள்

- கணக்கெடுப்பின் அடிப்படை: இந்தப் பகுப்பாய்வானது, முந்தைய 2017–18 கணக்கெடுப்பிற்குப் பிறகு ஏழு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட, 2025 ஆம் ஆண்டிற்கான (ஜனவரி முதல் டிசம்பர் வரை) தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் (NSSO) தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.
- நோய்களின் தன்மையில் மாற்றம்: சுகாதார மேம்பாடுகள் காரணமாகத் தொற்றுநோய்களில் (பரவும் நோய்கள்) குறிப்பிடத்தக்கக் குறைவு ஏற்பட்டுள்ளது; ஆனால், தொற்றா நோய்களில் (NCDs) மிகப்பெரிய அதிகரிப்பு காணப்படுகிறது.
- தொற்றா நோய்கள் குறித்த புள்ளிவிவரங்கள்: குறிப்பாக 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையே, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகியுள்ளது.
- தொற்றா நோய்களுக்கான காரணங்கள்: கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட வாழ்க்கை முறை மாற்றங்களே இதற்குக் காரணமாகும்; இதில் அதிகப்படியான பொருளாதார மற்றும் பணி சார்ந்த மன அழுத்தம், உடற்பயிற்சியின்மை மற்றும் முறையற்ற உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவை அடங்கும்.

(ii) நிறுவன ரீதியான சுகாதாரச் சேவைகள் (பிரசவங்கள்) குறித்த புள்ளிவிவரங்கள்

ஒரு முதன்மையான சுகாதாரக் குறியீடாக, மருத்துவமனை சார்ந்த (நிறுவன ரீதியான) பிரசவங்களை நோக்கிய ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது:

- தேசிய சராசரி: இந்தியா முழுவதும் நிறுவன ரீதியான பிரசவங்களின் விகிதம் 96.2% ஐ எட்டியுள்ளது.
- கிராமப்புறம் எதிர் நகர்ப்புறம்:
- கிராமப்புறம்: 95.6% பிரசவங்கள் மருத்துவமனைகளிலேயே நடைபெறுகின்றன.
- நகர்ப்புறம்: 97.8% பிரசவங்கள் மருத்துவமனைகளிலேயே நடைபெறுகின்றன.
- அரசு எதிர் தனியார் தேர்வு:
- கிராமப்புறங்களில், 71% மக்கள் தங்கள் சுகாதாரத் தேவைகளுக்கு முழுமையாக அரசு நிறுவனங்களையே சார்ந்திருக்கின்றனர். குறிப்பாக, கிராமப்புறப் பிரசவங்களில் 66.8% அரசு மருத்துவமனைகளிலும், 28.8% தனியார் மருத்துவமனைகளிலும் நடைபெறுகின்றன.
- நகர்ப்புறங்களில், தனியார் மருத்துவமனைகளைத் தேர்ந்தெடுப்போர் 50.8% ஆகவும், அரசு மருத்துவமனை வசதிகளைப் பயன்படுத்துவோர் 47% ஆகவும் இருப்பதால், இரு தரப்பிற்குமான விருப்பத் தேர்வு ஏறக்குறைய சமமாக உள்ளது.

(iii) மருத்துவக் காப்பீட்டின் பங்கு மற்றும் வளர்ச்சி

- விரைவான விரிவாக்கம்: கடந்த ஏழு ஆண்டுகளில், மருத்துவக் காப்பீட்டுப் பாதுகாப்பு (coverage) குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளது.
- ஒப்பீட்டுப் பாதுகாப்பு விகிதங்கள்:
- 2017–18: தேசிய சராசரி 16.6% ஆக இருந்தது (கிராமப்புறம் 14.1%; நகர்ப்புறம் 19.1%).
- 2025: தேசிய சராசரி 45.85% ஆக உயர்ந்துள்ளது (கிராமப்புறம் 47.4%; நகர்ப்புறம் 44.3%).
- வரம்புகள்: மக்கள்தொகையில் ஏறக்குறைய பாதி பேர் காப்பீடு பெற்றிருந்தபோதிலும், நேரடியாக சொந்தப் பணத்தில் செய்யப்படும் மருத்துவச் செலவுகள் அதிகமாகவே உள்ளன. காப்பீடு பெரும்பாலும் பகுதி அளவிலான

பலன்களை மட்டுமே வழங்குகிறது, மேலும் தனியார் வழங்குநர்களின் ஆதிக்கம் குடிமக்களுக்கான ஒட்டுமொத்த செலவுகளை அதிகமாக வைத்திருக்கிறது.

(iv) அரசு மருத்துவமனைகளின் பங்கு மற்றும் கொள்கை விமர்சனம்

- "காப்பீட்டுப் பொறி": நேரடிச் சேவையை விடச் சந்தை நிர்வாகத்திற்கு ஆதரவளிக்கும் மேற்கத்திய நிர்வாகப் பாணிகளுடன் ஒப்பிடப்படும் "காப்பீட்டுச் சந்தை" மாதிரியை நோக்கி அரசாங்கம் நகரும் போக்கு.
- தொடரும் பொறுப்பு: பொது சுகாதாரத்திற்கான தனது முதன்மைப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தன் கைகளைக் கழுவிக்கொள்ள முடியாது.
- 50% இடைவெளி: மக்கள்தொகையில் ஏறக்குறைய பாதி பேர் காப்பீடு இல்லாமல் இருப்பதால், அவர்களின் உயிர்வாழ்விற்கு அரசாங்கத்தின் நேரடி சுகாதாரச் சேவை இன்றியமையாதது.
- முதன்மைத் தீர்வு: அனைவருக்கும் சமமான அணுகலை உறுதி செய்வதற்காக, அரசு மருத்துவமனைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் வலுப்படுத்துவதுமே இந்தியாவின் சுகாதார நெருக்கடிக்கு ஒரே பயனுள்ள தீர்வாகும்